செ.வெ.எண்: 331 நாள்:22.05.2018

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வருவாய்த் தீர்வாயக் கணக்கு முடிப்பு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர்/ வருவாய்த் தீர்வாய அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் 2 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகைக்கான உத்தரவினை வழங்கினார்.

------

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் 1427 ஆம் பசலி ஆண்டு வருவாயத் தீர்வாயக் கணக்கு முடிப்பு நிகழ்ச்சி இன்று (22.05.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர்/ நாங்குநேரி வட்ட வருவாய்த் தீர்வாய அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு களக்காடு குறு வட்டத்தை சேர்ந்த தேவநல்லூர், கீழகாடுவெட்டி, சிங்கிகுளம், பழைய கிராமம், மேல்கரை இனாம் இடையன்குளம், தென்னீர்குளம், சிங்கிகுளம் மற்றும் புதுக்கிராமம் ஆகிய கிராம பகுதிகளை சேர்ந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களின் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார். மேலும் இப்பகுதி கிராம கணக்கு புத்தகங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, 18.05.2018 அன்று கோரிக்கை மனுக்கள் பெறப்பட்ட 2 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/– முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி. லட்சுமிபிரியா, மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் (பொது) திரு.சிவக்குமார், நாங்குநேரி வட்டாட்சியர் திரு.வர்க்கீஷ், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் திரு.சுப்புராமன், துணை வட்டாட்சியர்கள் திரு.குமார், திரு.பாலசுப்பிரமணி மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.